17 JUN 1997

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 02 திங்கட்கிழமை (16 05 1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 198

# மன்னாரிலிருந்து துருப்புகள் வவுனியாப் பகுதிக்கு நகர்வு!

## மன்னார்-வவுனியா வீதி பாவனைக்குத் தடை!!

கொழும்பு, ஜூன் 16

'எடிபல' இராணுவ நடவடிக்கையின் போது மன்னார் – வவுனியாப் பாதையைக் கைப்பற்றிய துருப்பினரில் ஒரு பகுதியினர் மன்னார் - வவுனியா வீதியால் வவுனியாவுக்கு மீள நகர்த்தப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக மன்னார் - வவுனியா வீதி பொதுமக்கள் பாவனைக்கு படையினரால் தடை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயசிகுறு (வெற்றி உறுதி) இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருடன் இணைந்து கொள்வதற்காக மன்னாரில் இருந்து ஒரு பகுதி படையினர் தற்பொழுது வவுனியா நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர்;

வவுனியாவில் இருந்து இவர்கள் தாண்டிக்குளத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று செய்தி ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் 14 படையினர் பலி!

கொழும்பு, ஜூன் 16

அம்பாறை மாவட்டம் மகா ஓயாவில் நேற்றுக் காலை தேடுதல் நடத்தச் சென்ற விசேட அதிரடிப்படை கொமாண்டோக்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் 14 கொமாண்டோக்கள் உயிரிழந்ததாக முன்கொண்டு கிடைத்த ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிப்பதாக இந்திய வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

இத்தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான கொமாண்டோக்கள் இறந்தும் காயப்பட்டும் இருக்கலாம் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## மேலும் 46 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 16

களுத்துறை, மகஸின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஐந்து பெண்கள் உட்பட 46 பேர் கடந்த வெள்ளிக்கிழமை அனுராதபுரம் நீதி மன்றத்தில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விடுதலையானவர்களில் வயோதிபத் தம்பதியும், மன நோயாளி ஒருவரும் அடங்குவர்.

இவர்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று பேரில் இருவர் 25 ஆயிரம் ரூபா பிணையிலும், மற்றவர் 10 ஆயிரம் ரூபா பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

ஏனையோர் 2 ஆயிரத்து 500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-3-21)

## விமானத்தில் மயங்கிய படையினர்

கொழும்பு, ஜூன் 16

வடக்குக்கு துருப்புக்களை ஏற்றிச் செல்லும் பணியில் ஈடுபடும் சரக்கு விமானங்களில் பயணம் செய்த படையினரில் சிலர் மயக்கமடைந்தனராம்.

வடபகுதிக்கு துருப்புக்களை ஏற்றிச் செல்லும் பணியில் தனியார் விமானங்கள் ஈடுபடுவது நிறுத்தப்பட்டுள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தொடராக வெடித்த மிதி வெடிகள்!

### மட்டக்களப்பில் பரபரப்பு

மட்டக்களப்பு விமானத்தளப் பகுதியில் தொடராக இணைக்கப்பட்டிருந்த மிதி வெடிகள் நேற்று வெடித்ததால் பெரும் பரபரப்பு நிலவியது.

மட்டக்களப்பு விமானத் தளத்தின் பாதுகாப்புக்காக படையினரால் அங்கு தொடராக இணைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் ஆடு ஒன்று சிக்கியதாகவும் –

ஆட்டை மீட்க முயற்சி எடுக்கப்பட்ட சமயம் 10 மிதி வெடிகள் அடுத்தடுத்து வெடித்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் விமானப்படையைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார். (இ-21-3)

## தாண்டிக்குளம் தாக்குதலினால் ரூ. 500 கோடி அரசுக்கு இழப்பு!

கடந்த 10ஆம் திகதி தாண்டிக்குளம், நொச்சிமோட்டை பகுதிகளில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக ஆயுதங்கள் மற்றும் வாகனங்கள் அழிக்கப்பட்டதால் 500 கோடி ரூபா பெறுமதியான இழப்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

55 ஆவது படையணியின் தலைமை அலுவலகம், ஆயுதக் கிடங்கு மற்றும் யுத்த வாகனங்கள், டிராக்டர்கள், லொறிகள் போன்றவை அழிக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்களில் ஆயுதங்களைப் படையினரா அல்லது விடுதலைப் புலிகளா அழித்தார்கள் என்பதை விட ஆயுதங்கள் இழக்கப்பட்டுள்ளன என்பதே முக்கியமானது என்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரி கூறியதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (இ-3-150)

## அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

### கொண்டுவர ஐ. தே. க. முயற்சி

அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஐ. தே. க. முயற்சி எடுத்துள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்காததைக் கண்டித்து அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வின் போது கொண்டுவர ஐ. தே. க. முயற்சி எடுத்துள்ளது.

இந்தப் பிரேரணைக்கு சிறிமாணி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவு தமக்கு கிடைக்கும் என்று ஐ. தே. க. வினர் நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு அதிகாரி நாளை வருகின்றார்

### இனப்பிரச்சினை குறித்துப் பேச்சுத் தொடரும்

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சின் தெற்காசியப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியான ரீமிஸ் நாளை இலங்கை வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதில் வெற்றி கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் தனது அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய ரணில் விக்கிரமசிங்கவை அங்கு அழைத்திருந்தது தெரிந்ததே.

பேச்சுக்களை முடித்துக் கொண்டு ரணில் விக்கிரசிங்க இன்று நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை இடம் பெறும் ஐ. தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் ரணில் பங்குபற்றுவார் என்று ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம் பிரிட்டிஷ் அரசின் விசேட பிரதிநிதியாக வரும் ரீமிஸ் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்துவார் என்றும்—

முக்கியமாக தமிழ் — முஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



[illegible] யும் உஷார்ப் படுத்தி வைத்திருக்கலாம் போல...!

### தாண்டிக்குளம் தாக்குதலின் போது

## மின்சாரம் தாக்கியும் படையினர் இறந்தனர்

கொழும்பு, ஜூன் 16

கடந்த 10ஆம் திகதி தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதிகள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 15 இராணுவத்தினர் மின்சார வயர்களில் சிக்கி உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது-

தாக்குதலின் போது மின்சார வயர்கள் அறுந்து வீழ்ந்ததாகவும்—

அவற்றில் சிக்கி இறந்த இவர்களின் சடலங்கள் கருகிய நிலையில் மீட்கப்பட்டன என்றும்—தகவல் வெளியாகி உள்ளது. (இ-3-21)

## இராணுவ நிலை மீது புலிகள் கிரனேட் வீச்சு

### மன்னாரில் 2 படையினர் பலி

கொழும்பு, ஜூன் 16

மன்னார், தாழ்வுபாடு கிராமத்தில் நேற்று முன்தினம் இராணுவ நிலை மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; ஒருவர் காயமடைந்தார்.

படையினர் நடத்திய தாக்குதலில் இரு விடுதலைப் புலிகள் இறந்ததாகவும்—

ஷெல் தாக்குதலில் இரு பொது மக்கள் காயமடைந்ததாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான இழப்புக் குறித்து விசாரிக்க சந்திரானந்த தலைமையில் குழு

கொழும்பு, ஜூன் 16

1995ஆம் ஆண்டு முதல் இழக்கப்பட்டுள்ள 21 விமானங்கள் தொடர்பாக விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி. சில்வா தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் முன்னாள் இராணுவத் தளபதி டெனில் பெரேரா, விமானப்படையின் முன்னாள் தளபதி பத்மன் மெண்டிஸ், முன்னாள் பொலீஸ்மா அதிபர் ஸ்ரீ ஹேரத், பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் சி. ஆர். டி. சில்வா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (இ-150-3)


NEW SCIENCE ACADEMY
நல்லூர்

98 A/L
பொருளியல் - திரு. லோகசிங்கம்
ஆரம்பம்: 18-06-1997 புதன் பிற்பகல் 3.30 மணி

99 A/L
கணக்கியல் - திரு. பாலவாசன்
புதன் பிற்பகல் 4.30 மணி

98 A/L புதிய பிரிவு
பங்குடமை
புதன் பி.ப. 4.00 - 5.00, வெள்ளி பி.ப. 3.00 - 4.00
ஆரம்பம்: 18 - 06 - 1997

97 A/L
கிரயக்கணக்கு - கூலிகள்
செவ். புதன், வியா. முற்பகல் 6.30 மணி
ஆரம்பம்: 17 - 06 - 1997

(47826)


## வெள்ளி விழா

பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்துசமய விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டுநடத்தும் வெள்ளிவிழா ஜூலை 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (இ-135

## சட்டவிரோத பனம் சாராயம்

வடமராட்சி கிழக்கு, மாமுனைப் பகுதியில் சட்டவிரோத பனம் சாராய உற்பத்தி அதிகரித்து வருகிறது.

# அமைச்சுப் பொறுப்புக்கள் குறித்து அஷ்ரப்புடன் உடன்பாடு

கொழும்பு, ஜூன் 16

வடக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு புனர்வாழ்வு அமைச்சராக இருக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சர் அஷ்ரப்பிடம் தெரிவித்தார் என கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அமைச்சர் அஷ்ரப் அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சு நடத்தினார்.

கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் தம்மை புனர்வாழ்வு அமைச்சராக நியமித்தமை தொடர்பான அதிருப்தியை அச்சமயம் அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

வடக்கு தவிர்ந்த ஏனைய பகுதி புனர்வாழ்வுப் பணியை மேற்கொள்ளும் அமைச்சராக இருக்குமாறு ஜனாதிபதி அவரிடம் அப்பொழுது தெரிவித்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

# ரயில்களில் கறுப்புப் பெட்டி!

கொழும்பு, ஜூன் 16

ரயில்களில் இடம்பெறும் விபத்தின்போது அந்த விபத்துக்கான காரணத்தை அறிய ரயில்களில் ''கறுப்பு பெட்டி'' பொருத்த புதிய போக்குவரத்து அமைச்சர் பௌசி நடவடிக்கை எடுத்துள்ளார்.

8 வருடங்களுக்கு முன்னர் ரயில்களில் ''கறுப்புப் பெட்டி'' பொருத்தும் நடைமுறை அமுலில் இருந்தது.

மீண்டும் அத்தகைய கருவிகளைப் பொருத்த அமைச்சர் திட்டமிட்டு வருகிறார்.

(இ-150-3)

# முல்லைத்தீவு மாவட்டப் பகுதியில் 43 பாடசாலைகள் செயல் இழப்பு

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 43 பாடசாலைகள் செயலிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

12 பாடசாலைகள் தாக்குதல் காரணமாகவும் —

31 பாடசாலைகள் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ளதாலும் — செயல் இழந்துள்ளன.

ஒட்டுசுட்டான், தண்டுவான், மாமடு, பழம்பாசி, ஆலைக்கல்லு, போட்டகுளம் பெரியமலை, கருவேயான் கண்டல், கற்சிலைமடு, பனிச்சங்கேணி, பெரியகுளம், மாங்குளம் ஆகிய பகுதிகளிலேயே பாடசாலைகள் செயலிழந்துள்ளன. (இ-3-164)

# மரண அறிவித்தல்கள்

## வெலிச்சோர் இம்மனுவல்

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கச்சாய் றோட் சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டவரான வெலிச்சோர் இம்மனுவல் 13-06-97 இல் காலமானார்.

இவர் அன்னம்மாவின் அன்புக் கணவரும் (பிரான்ஸ்), றீற்றாறோசலின் (தவம் - பிரான்ஸ்), யேசுதாசன் (பிரான்ஸ்), தேவதாஸ் (பிரான்ஸ்), மரியதாஸ் (ஜேர்மனி), றெஜினாராணி (ஜேர்மனி), றூபி (பிரான்ஸ்), அன்ரன்தாஸ் (ஐயா - பிரான்ஸ்), அஞ்சலா நவம், அருட்சகோதரி அருள் மரியா (A.C. சிசிலியர் கன்னியர்மடம், மட்டக்களப்பு), பப்பி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, மாகிறேற், சிசிலியா, யோசேப்பு (கிளாக்கர்), மற்றும் லில்லிகிறேஸ் தேவசகாயம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, யோண்பிள்ளை, யோசேப்பு, மற்றும் மலர் மெற்றில்டா (கனடா), தேவசகாயம் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), ராஜரட்ணம் (காலி), அரியரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதி நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
லில்லி கிறேஸ் தேவசகாயம்
(சகோதரி)

இல 28, நக்கா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(47828)

## திருமதி யோகலட்சுமி சதானந்தன்

(இலங்கை வங்கி, சுன்னாகம்)

திருமதி யோகலட்சுமி சதானந்தன் 14 - 6 - 97 அன்று காலமானார்.

அன்னார் சு. சதானந்தன் (இ. போ. ச., கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும், சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சி. கந்தையா மற்றும் திருமதி க. நாகம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும், திரு. சு. சபாரத்தினம் (ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற முதலியார்), திருமதி ச. சுந்தரேஸ்வரி ஆகியோரின் மருமகளும், திருமதி அன்னலட்சுமி சேனாதிராசா, க. கைலாயர் (மஸ்கன்ஸ் கம்பனி, கொழும்பு), திருமதி தவலட்சுமி சோமசேகரம், திருமதி ஜெயலட்சுமி நடேசபாத கிருதயர், க. விசுவநாதன் (காசாளர், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்), திரு. க. வைத்தியநாதன் (சுவிஸ்), க. நாகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி உஷாதேவி நாகராசா, திருமதி பிரேமாதேவி இராசேந்திரம், திருமதி சௌமியாதேவி விஸ்வலிங்கம் (ஆசிரியை, யா/மகாஜனக் கல்லூரி), திரு. சு. சண்முகானந்தன் (வைத்திய கலாநிதி U S. A) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 16-6-1997 திங்கள் காலை 10.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
ச. சதானந்தன்
(கணவன்)

க. விசுவநாதன்
(சகோதரன்)

முத்து கிருஷ்ணர் ஒழுங்கை,
சுன்னாகம்.

(47820)

# மனித உரிமைகள் சட்டத்தின்படி படையினர் செயற்படவில்லை!

## ஆணைக்குழு ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

''மனித உரிமைகள் சட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி படையினர் செயற்படவில்லை.''

இப்படி தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்ச் மாதம் 17 ஆம் திகதி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அடுத்த மாதத்தில் இருந்து இலங்கை மன்றக் கல்லூரியில் இயங்கவிருக்கிறது.

இந்த ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்ய விரும்புபவர்கள் ''கே ஜெயலத், செயலாளர், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை மன்றக் கல்லூரி, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7'' என்ற முகவரிக்கு அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப்படையினரோ, பொலீஸாரோ ஒருவரைக் கைது செய்தால் 24 மணி நேரத்தில் அவர் தொடர்பான விவரங்களை அவரது உறவினர்களிடம் தெரிவிக்க வேண்டும் என்றும்—

பெண் ஒருவர் கைது செய்யப்படும் போது அவருடன் வயோதிபப் பெண் ஒருவர் அழைத்துச்செல்லப்படவேண்டும் என்றும்— மனித உரிமை சட்டங்களில் சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சட்டங்கள் அமுல் செய்யப்படவில்லை என்றும்—

பலர் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சென்றும்— மனித உரிமைக் குழுவுக்குக் கூட அறிவிக்கப்படவில்லை என்றும்— ஜனாதிபதிக்கு அந்தக் குழு தெரிவித்துள்ளதென அறியவருவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-150-3)

## கணனி பயிற்சிக்கு ஐவர் தெரிவு

நவாலி, ஜூன் 16

நிதி அமைச்சின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தினால் அரச திணைக்களங்களில் கணக்கு எழுதுநகர்களாக பணிபுரிபவர்களுக்கு கொழும்பில் நடாத்தப்படவிருக்கும் கணனிப் பயிற்சிநெறிக்கு யாழ். செயலகத்திலிருந்து 5 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம் மாதம் 23ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 2ஆம் திகதி வரை பயிற்சி நடைபெறும். (இ-100)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப் பிரிவினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2 30மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது.

யாழ். விஞ்ஞான சங்கத்தின் தலைவர் பேராசிரியர் வி. நவரத்தினராஜா தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் யாழ். பல்கலைக் கழக பொருளியற்றுறைத் தலைவர் ப. சிவநாதன் [illegible] என்னும் பொருளில் கருத்துரை வழங்குவார். (இ)

## யுனிசெவ் உதவியுடன் நன்னீர்க் கிணறு

வலிகாமம் தெற்கு. ஜூன் 16

கிராமிய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பிரிவில் நன்னீர்க் கிணறுகள், மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

யுனிசெவ் நிறுவனத்தினரின் உதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

உடுவிலில் உள்ள துரையன் தோட்டம், தோரணக் கடவை ஆகிய பிரிவுகளில் குடியிருக்கும் மக்களின் குடிதண்ணீர் மற்றும் சுகாதார தேவைகள் இதன் மூலம் நிறைவு செய்யப்பட உள்ளன.

இப்பகுதி மக்களின் நலன் கருதி யுனிசெவ் நிறுவன உதவியுடன் 12 நன்னீர் கிணறுகளும், 75 மலசல கூடங்களும் அமைக்கப்பட உள்ளன.

(இ-152)

## நன்றி நவிலல்

எனது மகளின் தொலைந்த சங்கிலியைக் கண்டெடுத்து, பொலீஸில் ஒப்படைத்த

திரு. சின்னத்துரை வேலுப்பிள்ளை (நீராவியடி),
திரு. சண்முகதாசன் (இராசாவின்தோட்டம்),
திரு. ரஞ்சன் (இராசாவின்தோட்டம்)

ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வேலுச்சாமி செல்வமுருகன்
இல. 49, இராசாவின்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(47824)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்னாவில் ஆர்ப்பாட்டம்

பட்னா, ஜூன் 16

பீஹார் மாநிலத்தில் ஊழலில் சம்பந்தப்பட்ட உயர்மட்ட அரசியல்வாதிகள் அனைவரும் ராஜினாமாச் செய்ய வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த நூற்றுக்கணக்கான எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் கடந்த வியாழனன்று கைது செய்யப்பட்டனர்.

எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் போது நூற்றுக் கணக்கானவர்கள் வீதிகளிலும், ரயில் பாதைகளிலும் அமர்ந்துகொண்டு போக்குவரத்தைத் தடை செய்தனர்.

தலைநகர் பட்னாவில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டிருந்தன. (ஐ)

## ஐ. நா. செயலர் நம்பிக்கை

நியூயோர்க், ஜூன் 16

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சமீபத்திய பேச்சுவார்த்தைகள் 'உணர்ச்சிபூர்வமானதும் முக்கியமானதும்' என்று ஐ.நா. செயலாளர் கோபி அனான் வர்ணித்துள்ளார்:

இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்ந்து இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க உதவும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## பெரு அதிபர் பாப்பரசரை சந்திக்கிறார்

வத்திக்கான், ஜூன்16

பெரு ஜனாதிபதி அல்பேட்டோ புஜூமோரி தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இத்தாலியத் தலைநகர் ரோமுக்குச் சென்றுள்ளார்.

அவர் பாப்பரசர்இரண்டாவது அருளப்பர் கின்னப்பரையும் இத்தாலிய ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசவுள்ளார்

பாப்பரசருடனான சந்திப்பின் போது ஜப்பானியத் தூதரக பணயக்கைதிகள் விடயம் குறித்து பேசப்படும் என்று வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்தன.

லீமாவில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தில் நடந்த பணயக்கைதிகள் விவகாரத்திற்கு சமாதான வழிமுறையில் தீர்வுகாண்பதற்கு கத்தோலிக்கத் திருச்சபை முயற்சித்து வந்தது.

ஆனால் பெரு நாட்டு அரசு இராணுவ நடவடிக்கை மூலம் அதை முடிவுக்குக் கொண்டு வந்தது.

இது குறித்து வத்திக்கான் அப்போது கவலை தெரிவித்திருந்தது. (ஐ)

## துருக்கியில் தேர்தல் நடத்தும் நிலை

அங்காரா, ஜூன் 16

துருக்கியில் இவ்வாண்டு இறுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

ஆளும் கூட்டு முன்னணியில் இடம்பெறும் அரசியல் கட்சிகளுக்கு இடையேமுரண்பாடுகள் அதிகரித்து வருவதால் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் உருவாக்கப்பட்ட கூட்டு முன்னணி சிறிய பெரும்பான்மையுடன் ஆட்சி புரிந்து வருகிறது. (ஐ)

## நீரிழிவு அபாயம்

வாஷிங்டன், ஜூன் 16

'எய்ட்ஸ்' நோய்க்குப் பயன்படுத்தப்படும் புதிய ரக வில்லைகள் நீரிழிவு நோயை ஏற்படுத்தும் என்று அமெரிக்க உணவு மருத்துவ நிறுவனம் எச்சரித்துள்ளது. (ஐ)

★ கடந்த 4 ஆண்டு காலப் பகுதியில்

# இந்தியாவின் விமானப்படை 94 விமானங்களை இழந்தது!

புதுடில்லி, ஜூன் 16

இந்தியாவில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விமானங்களின் இழப்புகள் என்றுமில்லாதவாறு அதிகரித்து வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில் விமானப் படை 94 விமானங்களை இழந்துள்ளது. உலகளாவிய ரீதியில் ஒப்பிடும் போது இது மிக மோசமான இழப்பாக கணிக்கப்படுகிறது.

இந்த விமான இழப்புகள் தொடர்பாக பரந்த அளவில் விசாரணை செய்ய நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ளது.

இந்தக் குழு பாதுகாப்பு அமைச்சின் அறிவியல் ஆலோசகர் டாக்டர் அப்துல் கலாம் தலைமையின் கீழ் செயற்படும்.

கடைசியாக கடந்த திங்களன்று இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ''மிக் – 21'' விமானம் ஒன்று காஷ்மீர் பள்ளத்தாக்கில் வீழ்ந்து நொருங்கியது. இயந்திரக் கோளாறு காரணமாகவே இந்த விமானம் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்ட போதும் விபத்துக்கான உண்மையான காரணம் தெரியவில்லை.

கடந்த ஆண்டில் மட்டும் 16 ''மிக்'' போர் விமானங்களை இந்திய விமானப் படை இழந்துள்ளது.

# ஆயிரம் கெமருச் கெரில்லாக்கள் கம்போடிய அரசின் பக்கம் சாய்வு

## முற்றுகைக்குள் பொல்பொட்

நொம் பென், ஜூன் 16

கம்போடியாவின் ''கெமருச்'' கெரில்லா இயக்கத்தில் இருந்து பிரிந்து சென்றுள்ள சுமார் ஆயிரம் பேர் கம்போடிய அரசின் பக்கம் சேர்ந்துவிட்டனர்.

இவர்கள் தலைவர் பொல்பொட்டுக்கு ஆதரவான போராளிகளை எதிர்த்துக் கடும் சண்டையிட்டு வருவதாக கம்போட்டிய அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தாய்லாந்து எல்லையோரமாக அமைந்துள்ள ''கெமருச்'' தளங்களில் இருந்து தப்பியோடிய தலைவர் பொல்போட்டையும் அவரது ஆதரவாளர்களையும் எதிரணி கெரில்லாக்கள் சுற்றிவளைத்துள்ளதாகவும்—

தமது உயிரைப் பாதுகாப்பதற்காக தலைவர் பொல்பொட் சண்டையிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த ஒரு வருட காலத்துக்கு முன்னர் ''கெமருச்'' கெரில்லாக்களால் சிறைப்பிடிக்கப்பட்ட வெளிநாட்டவரான கண்ணி வெடி அகற்றும் நிபுணர் ஒருவரை பொல்பொட் இன்னமும் தம்முடன் பணயக் கைதியாக வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

சீன நிர்வாகத்தின் கீழ் வந்த பிறகு

# அனுமதியின்றி கூட்டங்கள் நடத்த ஹொங்கொங்கில் தடை வரும்

பீஜிங், ஜூன் 16

எதிர்வரும் ஜூலை முதல் திகதிஹொங்கொங்கின் நிர்வாகம் சீனாவின் அதிகாரத்தின் கீழ் வந்த பின்னர் ஆர்ப்பாட்டங்களையும், கூட்டங்களையும் முன் அனுமதியின்றி நடத்துவது அங்கு தடை செய்யப்படும்.

தேசிய பாதுகாப்பை காரணம்காட்டி இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்க பொலீஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சீன அதிகாரத்தின் கடும் போக்கான கட்டுப்பாடுகள் ஹொங்கொங்கில் நடைமுறைக்கு வரவிருப்பது

உலக அரங்கில்

தொடர்பாக ஏற்கனவே ஜனநாயக ஆதரவு சக்திகள் அங்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளன.

நிர்வாகம் கைமாறிய பின்பு சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நிறுத்தவும் சீன அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஹொங்கொங்கைத் தளமாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும் இந்தக் கட்டுப்பாடுகள் அவசியம் என்று சீன நிர்வாக அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர். (ஐ)

# பங்களாதேஷ் வான் பரப்பினுள் இந்திய ஹெலி அத்துமீறி பிரவேசம்

## இந்திய அரசு கவலை தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 16

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்ரர் ஒன்று பங்களாதேஷ் ஆகாயப் பிராந்தியத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்தமை குறித்து இந்திய அரசு தனது கவலையை பங்களாதேஷிடம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எம். ஐ. — 8 ரகத்தைச் சேர்ந்த ஹெலி ஒன்று பங்களாதேஷ் எல்லைக்குள் பிரவேசித்ததாகக் கூறப்படுகிறது. இச் சம்பவம் எப்போது எங்கே இடம்பெற்றது என்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

இச் சம்பவம் குறித்து பங்களாதேஷ் அரசு தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது. (ஐ)

## திரிபுராவில் 46பேர் கைது

புதுடில்லி, ஜூன் 16

24மணி நேரத்தில் 46 தீவிரவாதச் சந்தேக நபர்கள் திரிபுராவில் கைது செய்யப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாயன்று திரிபுரா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 7 படையினர் உட்பட 18 பேர் உயிரிழந்ததை அடுத்து தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மாநிலத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (ஐ)

தீ அனர்த்தம் நடந்த

## திரையரங்கின் நிர்வாகிகள் நால்வர் தடுப்புக் காவலில்

புதுடில்லி, ஜூன் 16

தெற்கு டில்லியில் பெரும் தீ விபத்து இடம்பெற்ற திரையரங்கின் முகாமையாளர்களான நால்வர் நீதிமன்ற உத்தரவின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றவியல் கவனயீனம் தொடர்பாக இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தீ விபத்தில் 60 பேர் பலியானதாகவும், 150 பேர் வரை காயமடைந்ததாகவும் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ரசிகர்களால் தீவிரமாக எதிர்பார்க்கப்பட்ட திரைப்படம் ஒன்றின் முதல் நாள் காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் நடைபெற்ற இத் தீ அனர்த்தம் குறித்து இந்தியப் பத்திரிகைகள் கண்டனக் குரல் எழுப்பியுள்ளன. (ஐ)

## ஜெயலலிதா வீட்டில் பெண் காயம்

சென்னை, ஜூன் 16

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சென்னை இல்லத்தில் துப்பாக்கிச் சம்பவம் ஒன்று நடைபெற்றதாகவும் அதில் பெண் ஒருவர் காயமுற்றதாகவும் சொல்லப்படுகிறது.

துப்பாக்கியைக் கழற்றிச் சுத்தம் செய்து கொண்டிருந்த வேளை தவறுதலாக அது வெடித்ததால் இச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக தேசிய பாதுகாப்புப் படை அதிகாரி ஒருவரும், கார்ச் சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## கேரளத்தில் மின்சார நெருக்கடி

சென்னை, ஜூன் 16

கேரளா மாநிலத்தில் கடும் மின்சார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் மாநிலத்தில் பல தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டிருக்கின்றன. மாநிலம் முழுவதுமே இருளில் மூழ்கியுள்ளது.

இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக கேரளாவுக்கு தினமும் 100 மெகவாட் மின்சாரத்தை இன்று முதல் வழங்க தமிழக அரசு இணங்கியுள்ளது. (ஐ)

## பாகிஸ்தான் மேஜர் பலி

இஸ்லாமாபாத், ஜூன் 16

இந்தியா — பாகிஸ்தான் எல்லைப் புறத்தில் கடந்த புதனன்று இரு நாட்டு எல்லைக் காவல் படையினரும் மோதிக் கொண்டதில் பாகிஸ்தானிய இராணுவ மேஜர் ஒருவர் கொல்லப்பட்டார்.

கிழக்கு சியால்கெட் பிரிவில் இரவு நேரத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. (ஐ)

## ஐ.நாவுக்கு பாகிஸ்தான் முறையீடு

இஸ்லாமாபாத், ஜூன் 16

இந்தியாவின் ஏவுகணை அச்சுறுத்தல் குறித்து கவனத்தில் எடுக்குமாறு பாகிஸ்தான் ஐக்கிய நாடுகள் சபையிடம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன்,பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

''இந்தியா அதன் 'பிருதுவி' ஏவுகணைகளை எல்லைப் புறங்களை நோக்கி நகர்த்துவதால் எமது பிராந்தியத்தில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்''— என பிரதமர் ஷெரீப் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கராச்சி வன்செயல்களில் 50 பேர் பலி

இஸ்லாமாபாத், ஜூன் 16

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இந்த ஆண்டில் மட்டும் இதுவரை நடந்த வன்செயல்களில் 50 பேர் வரை இறந்துள்ளனர்.

உலகில் வன்செயல்கள் மலிந்த நகரம் என்ற நிலைக்கு வந்து கொண்டிருக்கும் இந்த நகரில் கடந்த வருடம் 500 பேர் உயிரிழந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கதிரமலை சிவகௌரி ஆகிய எனது இல. 0907001149 விசேட அடையாள அட்டை, சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அடையாள அட்டை அடங்கிய மணி பேர்ஸ் திருநெல்வேலி அம்மன் கோயிலடிக்கும், பத்திரகாளி கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [47809]

சிவபாதசுந்தரம் கனகேஸ்வரி ஆகிய எனது இல. 626310990V தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன நீர்வேலி வடக்கில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நீர்வேலி வடக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். [47808]

### நாடகம் எழுதுவது எப்படி?

என்று விளக்கிக் கூறுகின்ற முதலாவது தமிழ் நூல், 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. ஒரு நாடகமும், 22 கட்டுரைகளும் எல்லோரும் வாசிக்கலாம். ரூபா 50/- [47804]

### மணமகன் தேவை

விசாகம் 2ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமற்ற, 37 பாவமுள்ள, இந்து கௌரவ குடும்பம் 32 வயது பட்டதாரி ஆசிரியைக்கு, உத்தியோக மணமகன் தேவை. தொடர்பு: 'திருமுருகன்' திருமண சேவை, கைதடி. [47810]

ஓர்கன்
இசைப் பயிற்சி
வகுப்பு
ஆரம்பமாகி விட்டது
நெல்லியடியில்
சயன்ஸ்
அக்கடமி
பருத்தித்துறையில்
N.C.A கல்வி
நிறுவனம்
- நிர்வாகி
(47790)

### சோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர, கல்வித்தடை, விவாகத் தடை, தொழில் தடை தீர ஆலோசனைகள் வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ''பொய்யா மொழி'' சோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூர். (47775)

வெங்காயம், மரக்கறிவகைகள்
பொதி செய்யக்கூடிய
நெற் BAG
தும்புத்தடி, பிரஸ்
உற்பத்திக்குத்தேவையான
தடி
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
நியூ நாதன்
றேடர்ஸ்
213, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(47750)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு வருவோர்

# சைக்கிள்களைப் பாதுகாப்பாக விடுவதற்கு வசதி இல்லை


யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். போதனா வைத்திய சாலையில் இயங்கி வந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மீளச் செயற்படாதிருப்பதினால் ஆஸ்பத்திரிக்கு சைக்கிளில் வருவோர் சைக்கிள் பாதுகாப்பாக விட வசதியின்றி அவதிப்படுகின்றனர்.

ஆஸ்பத்திரிக்கு வருவோர் தமது சைக்கிள்களை பாதுகாப்பாக விட வசதியின்றி ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு முன்பகுதியிலும், வீதியோரங்களிலும் நிறுத்திவைப்பதைக் காணமுடிகிறது.

(இ-15)

## 53 ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



### அமரர் ஆறுமுகம் தெய்வேந்திரன்

(யாழ். மாவட்ட கூட்டுறவுப் பரிசோதகர், உரிமையாளர்: ஆறுமுகம் கூல்பார், மயூரன்கபே சாவகச்சேரி)

மண்ணுலகில்: 16-06-1944
விண்ணுலகில்: 28-08-1996

அல்லலுற்று வந்தநேரம் எம்மை ஆதரித்தாய் —
பெரியமாமா
அன்பு முகம் காட்டி எம்மை அரவணைத்தாய்
மாமா
கொடிய நோய் தங்களின் உடலில் இருப்பது
தெரியாமல்
சோர்வின்றி ஓய்வின்றி உழைத்தாயே — மாமா
எங்களையே கலங்கவைத்து சென்றாயே பெரியமாமா
வாயார பெரியமாமா என்று
அழைத்திடவே நீங்களில்லை
சடுதியிலே ஏன் மாமா பிரிந்து சென்றீர்
வெள்ளைமனம் மழலைக்குணம் நல்ல மகன் — உங்கள்
செல்வமகன் மயூரன் என்மச்சான்
உள்ளதெல்லாம் இழந்தது போல் உங்கள் பிரிவால்
உருக்குலைந்தே நிற்கின்றார்.

இன்று என் பத்தாவது பிறந்தநாளில் கண்ணீரால் மலர் நனைத்து தங்கள் உருவநிழலில் என் அஞ்சலியாய் படைக்கின்றேன் பெரியமாமா.

மருமகன் நி. நிஷாந்தன்

143, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம். (47815)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

உதயம்: 22-07-1990
அஸ்தமனம்: 19-06-1994

### செல்வன் ஹேமபூஷண் வெங்கடகிருஷ்ண சர்மா

''ஆண்டு பிரமோதூத ஆனிப் பூர்வபக்க
பூண்ட ஏகாதசிப் பெருநாளில் — காண்பான்
சோமனைத் தரிசித்த சிவன் சேவடியாம்
சிவபதத்தை ஹேமபூஷண் எனும் சேய்''

உம்பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்கா, தங்கைகள்.

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (47819)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசவல்லவன் யோகமலர்

மலர்வு: 04 – 02 – 1923
உதிர்வு: 29 – 05 – 1996
திதி: 16 - 06 - 1997

அன்புத் தெய்வமே அணையாத ஜோதியே!
இந் நிழலாய் இருந்தெம்மை சிறப்போடு
வளர்த்தவரே
சென்றது எங்கே? செந்திருவே உந்தன்
அன்புமுகம் காணாது அகன்றதே ஓராண்டு.

ஆத்மா சாந்தி பெற நாளும் விழிநீரால் இறைவனை அர்ச்சிக்கின்றோம்.

மகள்:- திருமதி வி. பசுபதிப்பிள்ளை
(அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)
மகன்:- திரு. இ. இராசயோகன்
(கிராம சேவை அலுவலர், நவாலி தெற்கு)
மகன்:- திரு. இ. இராசசிங்கம்
(லண்டன்)
மகள்:- திருமதி. இ. சிவகுருநாதன்
(வவுனியா)

மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

''விதானை வளவு'',
மானிப்பாய். (47794)

# நினைவஞ்சலி



பெரியதம்பி
கந்தையா

10-06-1907
16-06-1986

(சிவலிங்கப்புளியடி)



கந்தையா
செல்லமுத்து

22-08-1917
28-05-1985

P. K. பாலசிங்கம்,
சகோதர, சகோதரிகள்.

''விதானை சங்கரியா வளவு''
718, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை அனுமதி கிடைத்த பின்பே பயிலுநர் ஆசிரியர் நிரந்தரம்

கொழும்பு, ஜூன் 16
பயிலுநர் ஆசிரியர்களை அவர்களது சேவையில் நிரந்தரமாக்குவது தொடர்பாக அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

கடந்த நான்கு வருடங்களாக பதவியில் நிரந்தரமாக்கப்படாது சேவையாற்றி வரும் சுமார் பத்தாயிரம் ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்த வண்ண முள்ளனர்.

அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்ததும் ஆசிரியை நியமனத்துக்குரிய தகைமையான ஜீ. சீ. ஈ. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்து மேற்படி சேவைக்காலம் பயிற்சியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் சேவையில் நிரந்தரமாக்கப் படுவர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

அதன் பின்னர் அவர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குரிய சம்பள அடிப்படையில் நியமனம் பெறுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## பனை மரங்களை, சலாகைகளை வாகனங்களில் ஏற்றிச்செல்லதடை

கொழும்பு, ஜூன் 16
பனை மரங்களையோ அல்லது சலாகைகளாக்கப் பட்ட அதன் பலகைகளையோ அல்லது அதன் விறகுகளையோ வாகனங்களில் எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டிருக்கிறது.

பனை மற்றும் பலா, ஈரப் பலா போன்ற மரங்களை அல்லது அவற்றின் சலாகைகளை அல்லது விறகுகளை வாகனங்களில் எடுத்துச் செல்வது நாடளாவிய ரீதியில் தடை செய்யப்பட்டிருப்பதாக விவசாய காணி அமைச்சு அறிவித்துள்ளது.

வாகனங்களில் இவற்றை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதை இடை நிறுத்துமாறு விவசாய, காணி அமைச்சு சகல பிரதேச செயலாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது. (ஐ)

## சோதனையிடப் போவதாகக் கூறி வீட்டில் கொள்ளையிட முயற்சி

### கச்சாய் வீதியில் சம்பவம்

இரவுவேளை வீட்டுக்குள் நுழைந்து சோதனையிடப் போவதாகக் கூறி கொள்ளையிட முயன்றவர்கள் குடும்பஸ்தரைத் தாக்கி விட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

கொடிகாமம்- கச்சாய் வீதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த செவ்வாயன்று இச் சம்பவம் இடம் பெற்றது.

இச்சம்பவம் குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது:-

வீட்டில் இருந்தவர்கள் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் செல்ல ஆயத்தமான வேளை முற்றத்தில் நாய்கள் பலமாகக் குரைத்தன.

விடாது தொடர்ந்து நாய்கள் குரைத்ததை அடுத்து குடும்பஸ்தர் 'டோர்ச்லைற்' சகிதம் வந்து பார்த்தார். அச்சமயம் திடீரென அவர் முன் தோன்றிய சிலர் அவரிடம் இருந்து 'டோர்ச் லைற்'றைப் பறித்தெடுத்துக் கொண்டு வீட்டைச் சோதனையிடப் போகிறோம் எனக் கூறியுள்ளனர்.

அவர்களில் ஒரு நபர் வீட்டுக்குள் நுழைந்தார். அதனால் பீதியடைந்த குடும்பஸ்தரின் மனைவி பிள்ளைகள் வெளியே ஓடி வந்துள்ளனர்.

அவர்கள் அனைவரையும் மரம் ஒன்றின் கீழ் அழைத்துச் சென்ற அந்த நபர்கள் அங்கு வைத்து குடும்பஸ்தரை கயிற்றால் கட்ட திட்டமிட்டதையும் வீட்டில் கொள்ளையிட வந்துள்ளனர் என்பதையும் தெரிந்து கொண்ட குடும்பத்தவர்கள் 'திருடர்' எனக் கூக்குரலிட்டனர். அதையடுத்து அந்த நபர்கள் குடும்பஸ்தரைப் பலமாகத் தாக்கி விட்டு ஓடிமறைந்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட நபர்கள் வெள்ளை நிறக் காற்சட்டையும் அதே நிற 'ரீசேட்டும்' அணிந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-31)

## கண் நோயும் மருந்தும்

கண்கள் சிவந்திருக்கும் ஒருவரைப் பார்த்து ''என்ன கண்ணில்?'' என்றால் ''கண் நோ'' என்று பதில் சொல்லும் காலம் இது. வழமையாக கண் நோய் உண்டாகும் வேளைகளில் அதற்குரிய 'குளோரம் பெனிக்கோல்' எனப்படும் (Choloram Phenicol) மருந்துக்கு யாழ்ப்பாணத்தில் பெரும் தட்டுப்பாடும் வந்துவிடும். கொழும்பில் இந்த ''ரியூப்'' மருந்து 3 ரூபா விற்றால் யாழ்ப்பாணத்தில் 10 ரூபாவுக்கும் வாங்க முடியாது.

கண் நோய் ஒரு வகை வைரசினால் ஏற்படும் வியாதி. இத்தகைய வைரசினால் ஏற்படும் நோய்களுக்கு மருந்து பாவிக்கத் தேவையில்லை. நோயைக் குணமாக்குவதில் மருந்து எதுவித பங்கும் ஆற்றாது. ஆயினும் நோயுள்ள பகுதிகளில் மேலும் வேறு தொற்றுக்கள் ஏற்படாதவாறு தடுப்பதற்காகப் பாவிக்கப்படும் கிருமி எதிர்ப்பு மருந்துதான் 'குளோரம் பெனிக்கோல்'' என்ற வீரியம் குறைந்த மருந்து.

இதனை மருந்தகங்களில் கண் நோய்க்கான மருந்து என்று சொல்லியே விற்கிறார்கள்.

### வாசகர் திருமுகம்

இதற்கும் இம்முறை ஆபத்து வந்துவிட்டது. எனக்குத் தெரியக் கூடியதாக கடந்த பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக சீனாவில் தயாரிக்கப்படும் மேற்கூறப்பட்டமருந்து இலங்கையில் விற்பனையாகிறது.

தற்போது இம்மருந்து கொழும்பில் பதியப்படவில்லை என்று காரணம் கூறி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மருந்தகங்களில் இருந்து பறிமுதல் செய்யப்படுகிறது. இப்போது — மிகத் தேவையான நேரத்தில் — விற்கக்கூடாது என்று தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இம்மருந்து கொழும்பில் வந்திருந்து. பின் யாழ்ப்பாணத்தில் மொத்த வியாபாரிகளின் கைகளில் பல மாதங்கள் கிடந்து தற்போது தனியார் சில்லறை விற்பனை நிலையங்களுக்கு வந்தபோதுதான் பறிமுதல் செய்யப்படுகிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது முன்னர் தெரியாமற் போயிற்றோ? அல்லது பத்திரிகைகளில் அடிக்கடி வாசிக்கும் ஆயுதக் கொள்வனவு ஊழல் போன்று இவர்களும் மருந்து இங்கு வருவதற்கு துணை போனார்களா?

இவ்விலை குறைந்த மருந்து விற்பனைக்கு தடை செய்யப்பட்டதால் வேறும் விலை கூடிய மருந்துகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு!

க. தேவகுருநாதன்,
சங்கரத்தை மத்தி,
வட்டுக்கோட்டை.

# மட்டுவில் பகுதியில் கசிப்பு வேட்டை

### திடீர் சோதனையில் பலர் சிக்கினர்

சாவகச்சேரி, ஜூன் 16
மட்டுவில் வடக்கு சந்தையடிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் கசிப்பு விற்பனை போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த சிலர் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பரிசோதகர்களின் திடீர் பரிசோதனையில் சிக்கிக் கொண்டனர். இவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கசிப்பு உற்பத்தி, விற்பனை போன்ற நடவடிக்கைகள் சாவகச்சேரி நகரப்பகுதியிலும் மற்றும் மீசாலை பழைய புகையிரத நிலைய சந்தி, மந்துவில் ஆகிய இடங்களில் இடம் பெறுவதாக பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஐ 31)

## கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் பருத்தித்துறைக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். (ஐ-118)

# குருநகர் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர் தொகை அதிகரிப்பு

### ஒரு டாக்டர் மட்டுமே 5 நாள்கள் சேவை

குருநகர், ஜூன் 16
குருநகர் பொது மருத்துவமனையில் ஒரு வைத்தியரே கடமையிலுள்ளார். அவரும் கிழமையில் இருநாள்கள் பாடசாலை வைத்தியப் பரிசோதனைக்குச் சேவையாற்றச் செல்வதனால் அங்கு வரும் நோயாளிகளைப் பார்வையிடமுடியாத நிலை ஏற்படுவதாக குருநகர் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இங்கு கடமையிலிருந்த பாடசாலை வைத்திய அதிகாரி தற்போது சேவையில் இல்லாததால் இவரே அவரது கடமையையும் செய்யுமாறு யாழ். மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தினால் பணிக்கப்பட்டுள்ளார்.

வன்னியில் இருந்து பெரும் எண்ணிக்கையான குருநகர் மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பி வந்து குடியேறி வருகின்றனர். இவர்கள் சிகிச்சைக்காக குருநகர் வைத்தியசாலையையே நாடிச் செல்வதால் வைத்திய அதிகாரியின் சேவை நாளாந்தம் அவசியமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-51)

## கப்பலில் பொருள் ஏற்றப்படும்

யாழ்ப்பாணம், ஜூன் 16
பருத்தித்துறைத் துறைமுகத்தில் அஸ்ரோறியா எனும் கப்பல் தற்சமயம் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இக்கப்பல் மூலம் புகையிலைச் சிப்பம், சுருட்டு, கடலட்டை, புழுக்கொடியல், பனங்கட்டி, போன்றவை வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காகப் பதிவு செய்தவர்கள் இது தொடர்பான ஒழுங்குகளை மேற்கொள்ள பருத்தித்துறை இறங்குதுறைப் பொறுபதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலில் வெற்றுச் சோடாப் போத்தல்களும் எடுத்துச் செல்லப்படவுள்ளன. (ஐ-5)

## மாணவர் ஒன்று கூடல்

வடமராட்சி, ஜூன் 16
நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்று கூடல் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத் தலைவர் பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-173)

## இலாபப் பணம் விரைவில் பங்கீடு

குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத்தில் பங்குதாரர்களாகத் தமது பணத்தை முதலிட்டவர்களுக்குரிய இலாபப்பணம் வெகுவிரைவில் அவர்களுடைய பங்கின் அடிப்படையில் பிரித்து வழங்கப்படும் என குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் கி. சிலுவைதாசன் தெரிவித்தார்.

இச் சங்கத்தில் இதுவரை 219 பங்குதாரர்கள் சேர்ந்துள்ளார்கள்.

இச் சங்கத்தில் புதிய பங்குதாரர்களாக சேர விரும்புவோர் சேர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-51)

## குருநகரில் வீதி திருத்தம்

குருநகர், ஜூன் 16
குருநகர் பொது மருத்துவமனைக்குச் செல்லும் வீதி அண்மையில் செப்பனிடப்பட்டுள்ளது. மருத்துவமனைக்கு அருகே சேதமடைந்த நிலையில் காணப்படும் மதகும் விரைவில் திருத்தப்படவுள்ளது. (ஐ-51)

## சமய சந்நிதிகளில்

கொக்குவில் — நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் கோயிலின் வருடாந்த மஹோற்சவத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து கைலாயவாகனத் திருவிழா நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

தென்புலோலி குரும்பைகட்டி வைரவர் கோயில் வருடாந்த அபிசேகம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்களுக்கு நடைபெறும்.

இறுதித் தினமான இம் மாதம் 30 ஆம் திகதி சங்காபிசேகம் இடம் பெறும். (ஐ-173)

★ ★ ★

பருத்தித்துறை சுப்பர் மடம் அருள்மிகு முனீஸ்வரப் பெருமான் ஆலய நூதனா பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-173)

## மாணவருக்கு நன்கொடை

வடமராட்சி, ஜூன் 16
பருத்தித்துறை நகரப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கு பருத்தித்துறை நகர சபை நன்கொடைகளை வழங்கவுள்ளது.

இந் நன்கொடை வழங்கும் வைபவம் விரைவில் நடைபெறவுள்ளது. (173)

## மகாதேவசுவாமி குறித்த வதந்திகள்

நல்லூர், ஜூன் 16
கிளிநொச்சி ஜெயந்திநகர் மகாதேவ ஆச்சிரமத்தின் முதல்வர் ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள் பூரண சுகத்துடன் இருந்து தொண்டாற்றி வருகிறார்.

கணேசானந்த சுவாமிகள் தற்சமயம் ஸ்கந்த புரத்தில் தங்கியுள்ளார் எனவும் அவர் தம்முடன் மிக அண்மையில் தொடர்பு கொண்டுள்ளார் எனவும் கந்தர்மடம் சிவகுருநாத பீட முதல்வர் ஸ்ரீமத் சோமஸ்கந்த சுவாமிகள் உதயனுக்குத் தெரிவித்தார். கிளிநொச்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது சுவாமிகள் இறைபதம் எய்தியதாகப் பரவலாக உலவிய வதந்திகளைத் தொடர்ந்து சுவாமிகளது நிலை குறித்து அறிய அவரது அடியார்கள் தம்மிடம் தொடர்பு கொண்டதாகவும் சோமஸ்கந்த சுவாமிகள் தெரிவித்தார். (அ-103)

## நியமனம்

யாழ்ப்பாணம் ஜூன் 16
சட்டத்தரணியும், எழுத்தாளரும், தமிழ்ப் பத்திரிகையாளருமான பொன், பூலோகசிங்கம் இலங்கை நீதி அமைச்சினால் சத்திய ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஏ. என் இராமச்சந்திரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சட்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றி வருகிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்., நல்லூர் கோட்டங்களில்
# கல்வி அபிவிருத்திக்கு என 22 பாடசாலைகள் தெரிவு

''யுனிசெவ்'' உதவியுடன் கல்வித் தரம் குறைந்த பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்களில் 22 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான செயலமர்வு இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் அங்கு தவறாமல் சமுகமளிக்குமாறு பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ. தானையா கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

சென். சாள்ஸ் ம. வி., கொழும்புத்துறை, சென். ஜோசப் வித்தியாலயம், நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித்தியாலயம். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், கொட்டடி நமசிவாய வித்தியாலயம், நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலை, கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், சென். ஜேம்ஸ் ம. வி, சென். றோக்ஸ் றோ. க. த. க. பாடசாலை.

முத்துத்தம்பி ம. வி., அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம், நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், நல்லூர் ஸ்தான சி. சி. த.க பாடசாலை, நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, உயரப்புலம் மெ. மி. த. க. நல்லூர் சென். பெனடிக்ற் றோ. க. பாடசாலை, திருநெல்வேலி றோ. க. த. க. பாடசாலை, கல்வியங்காடு இந்து த.க.பாடசாலை, கோண்டாவில் சி. சி, த. க. பாடசாலை.

கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், கோண்டாவில் றோ.க. த.க. பாடசாலை. (ஐ-51)

# பயணத்தின் போது பல சிரமங்கள்; எனினும் நயினைக்கு பக்தர் கூட்டம்

அலைகடலின் மத்தியில் நின்று அருள்பாலித்து வரும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இவ்வேளையில் தினமும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் சென்று அம்மனைத் தரிசித்து வருகின்றனர். நேற்று முன்தினம் சனிக்கிழமையன்றும் பெருந்தொகையான பக்தர்கள் ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் உட்பட பெருந்தொகையானவர்கள் போக்குவரத்து கஷ்டங்கள், பாதுகாப்பு கெடுபிடிகள் மத்தியிலும் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டதை நேரில் அவதானிக்க முடிந்தது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை நடத்தும் நயினாதீவுக்கான விசேட பஸ் சேவைகள் சகலவற்றிலும் பக்தர் கூட்டம் நிறைந்து இருக்க இடமின்றி நின்று கொண்டும் பிரயாணம் செய்தார்கள். எல்லா பஸ்களிலும் போகும் போதும் வரும் போதும் அதிகளவு அடியார்கள் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றனர்.

யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு குறிகாட்டுவான் துறைமுகத்தை பஸ் வண்டி அடையும் வரை ஐந்து இடங்களில் சோதனைச் சாவடிகளில் பிரயாணிகள் யாவரும் இறங்கி நடந்து செல்ல வேண்டிருந்தது. பண்ணை வீதியைத் தாண்டி அல்லைப்பிட்டி சந்தியிலுள்ள சோதனை முகாமில் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக ஒரு சிறு துண்டு கொடுக்கப்படுகின்றது, திரும்பிவரும் போது அதை ஒப்படைத்துவிட்டு எமது தேசிய அடையாள அட்டையைத் திரும்பப் பெற வேண்டும். சுமார் ஒரு மணி நேரம் கடந்து விடுகின்றது.

இதையும் தாண்டி அப்பால் சென்றால் வேலணை துறையிலும் இறங்கி சற்று தூரம் நடந்து சென்று பாதுகாப்புப் படையினரின் சோதனைகளை முடித்துக் கொண்டு அப்பால் சென்றால் புங்குடுதீவு ஆரம்ப இடத்திலும் இறங்கி சோதனை! ஈ. பி. டி. பி யினரும் அவ்விடத்தில் தனியான சோதனை நடத்தினார்கள். அப்பால் சென்றால் குறிகாட்டுவான் துறை முகத்திற்கு ஒரு கிலோ மீற்றர் முன்னதாக ஒரு சோதனைச் சாவடியில் சகலரும் இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். பொருள்களும் சோதனையிடப்படுகின்றன. பின்பு குறிகாட்டுவான் துறை முகத்திலிருந்து பத்து ரூபா கட்டணம் செலுத்தி படகில் சென்றால் நயினாதீவு இறங்குதுறையை அரைமணிநேரத்தில் அடைய முடிகிறது. படகுச்சேவை ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை நடைபெற்று வருவதால் அதில் அதிக நேரம் காத்திருக்கவேண்டியதில்லை. நயினாதீவு துறை முகத்தில் மக்கள் படகிலிருந்து இறக்கப்பட்டதும் எமக்கு முன்பு தந்த அடையாள ''பாஸை'' பார்வையிட்டு அங்கும் ஒரு விசேட துண்டு (பாஸ்) தருகின்றார்கள், இதிலும் அரை மணி நேரம் செலவாகின்றது. கடும் காற்று வீசுவதால் அவர்கள் தரும் பாஸ் (சிறிய துண்டுகள்) காற்றுடன் சேர்ந்து பறந்து போகாதிருப்பதற்காக ஒவ்வொருவரும் அதை மிகவும் சிரமப்பட்டு பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

## செய்தி மடல்

ஆலயத்தில் பூசைகள்-வழிபாடுகள், நேர்த்திக் கடன்கள் செலுத்துதல் ஆகியன மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்று வருகின்றன. அங்கு சென்ற உடனேயே அம்மனை தரிசனம் செய்துவிட்டு மதிய பூசையையும் பார்த்துவிட்டு கலந்து கொண்டுவிட்டு உடனடியாகத் திரும்பும் பக்தர்களே அதிகம். பாதுகாப்பு காரணங்களுக்காக சோதனை சாவடிகளில் நீண்ட நேரம் செலவிடப் படுவதால் ஆறுதலாக பூசை வழிபாடு செய்ய பலருக்கும் முடியாது போய் விடுகின்றது. அடுத்த படகில் திரும்பிச் செல்வதற்கு இவர்கள் அவசரப்படுகின்றார்கள். இரவு வருவதற்குள் வீடு திரும்ப வேண்டும் என்ற அவசரமே மேலோங்கி நிற்கிறது.

ஆலயத்தின் மேற்கு வீதியில் பிரதேச செயலர் அலுவலகம், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், சாரணர் பாசறை ஆகியன உற்சவ காலத்தை முன்னிட்டு செயற்பட்டு வருகின்றன. தெற்கு வீதியில் பொலீஸ் நிலையம் உள்ளது. [illegible]மளவு பெண் பொலீஸாரும் காணப்படுகின்றனர்.

சனிக்கிழமையன்று மதிய பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த போது பாதுகாப்புப் படையினர் இருவர் சிவில் உடையில் உள் வீதிக்குச் சென்று வந்ததை பலரும் கண்டனர். இவர்கள் மேலங்கியை (சேட்டை) கழற்றாது சென்று வந்தது பல பக்தர்களால் சீரணிக்க முடியாத ஒன்றாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு வழமைபோல ''நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை'' அன்னதானம் வழங்கி வருகின்றது. கடந்த 1960 ஆம் ஆண்டு முதல் இச் சபை உற்சவ காலங்களில் நடத்தி வரும் இந்த அன்னதானப் பணியானது பக்தர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அன்போடு வரவேற்று உணவு பரிமாறும் பண்பு அனைவராலும் பாராட்டப்படுகின்றது குறிப்பிடத்தக்கது ஆலய வடக்குப் பக்கமாக யாத்திரிகர் விடுதி காணப்படுகின்றது. இங்கு கட்டணம் செலுத்தி தங்கியிருந்துவிட்டு மறு நாள் திரும்பும் குடும்பங்கள் பல. மிகவும் சுத்தமான முறையில் இது பேணப்பட்டு வருகின்றது. எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ள தேர்த் திருவிழா, மறுநாள் நடைபெறவுள்ள தீர்த்தத் திருவிழா ஆகிய விசேட உற்சவங்களுக்கு யாழ்.குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மிகப் பெரும் தொகையான அடியார்கள் இங்கு திரண்டு அம்மன் அருள் நாடி வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் ஆலய அறங்காவலர் சபையினர் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். பஸ்மூலமும் படகு மூலமும் பிரயாணம் செய்வதால் ஏற்படும் போக்குவரத்து கஷ்டங்கள்' பாதுகாப்பு கெடுபிடிகள், இடைக்கிடை வெய்யிலில் இறங்கி நடந்து செல்லுதல் விசேட ''பாஸ்'' பெறுதல் ஆகிய பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்க வேண்டியிருந்தாலும் அம்மனின் அருட்கடாட்சத்தைப் பெற, பிறவிப் பயன் பெற, துன்பங்கள்—இன்னல்களிலிருந்து மீட்சி பெற அம்மன் தரிசனம் செய்ய வேண்டும் என்ற [illegible] அவாவே மேலோங்கி நிற்பதையே எங்கும் காணக்கூடியதாக இருக்கிறது.

**நா. ம. கந்தசாமி**

# பெருமாள் கோயிலடிச் சம்பவம்: சடலம் இனங்காணப்பட்டது

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5-45 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது உயிரிழந்தவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்பட்டது.

யாழ்ப்பாணம் அன்னங்கை ஒழுங்கையைச் சேர்ந்த அப்பையா ஜெயராசா (வயது 38) என்பவரே மரணமானவராவார்.

யாழ். நவீனசந்தைப் பகுதியில் உள்ள பழக்கடை உரிமையாளரான இவர் பழக்கடையை பூட்டிவிட்டுமாலையில் வீடு திரும்பிய போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணையின் பின்சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

(ஐ-15)

# பாராட்டு விழாவும் பரிசளிப்பும்

வடமராட்சி, ஜூன் 16

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக் குழு மாணவர்களிடையே நடத்திய கட்டுரைப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும், பாராட்டு விழாவும் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரியில் இணைப்புக் குழுவின் தலைவர் என். ஜெயரத்தினம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் பருத்தித்துறை வட. இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம், யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் என். ஞானகுமாரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் ''கல்விப்பயிற்சியும், அறிவுவளர்ச்சியும்'' என்ற தலைப்பில் கட்டுரை வாசிப்பார்.

(ஐ-173)

★ ★ ★

பருத்தித்துறை, ஜூன் 16

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் கல்லூரி அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சிவராசா பரிசில்களை வழங்குவார். (ஐ-118)


## கண்ணீர் அஞ்சலி

அன்னசத்திர ஒழுங்கையைச் சேர்ந்த

**அமரர் த. ஜெயராசா**

(வர்த்தகர், யாழ் நவீன சந்தை)

அவர்கள் 14 - 06 - 97 அன்று அகால மரணமானதை இட்டு அவர்களுக்கு எனது கண்ணீர் அஞ்சலியை காணிக்கை ஆக்குகின்றேன்.

ப. பாலசுப்பிரமணியம்
(யாழ். மரக்கறி மார்க்கட் வியாபாரி)

(47823)



## அறிவொளி கல்விக் கழகம்

150, கோயில் வீதி, நல்லூர்.

விசேட கணித மீட்டல் வகுப்பு

**O/L 97 Dec.**

- 19 - 06 - 1997 பி. ப. 4-00 மணி

ஆசிரியர்: திரு. P. ஸ்ரீசுந்தரராசா

★ வாரத்தில் 4 நாள்கள்
★ கணிதத்தில் சித்தியடையாத, பின்னடைவான மாணவர்களுக்கு தனிப்பட்ட கவனிப்பு
★ பயிற்சிப் பரீட்சைகள்- அச்சடித்த குறிப்புக்கள்
★ அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளுங்கள்,

— நிர்வாகி

(47822)



புலோலி

பர்வதவர்த்தனிசமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானம்

## சிற்பத் தேர் வெள்ளோட்ட விழா

ஈசுர வருடம் ஆனித்திங்கள் 5 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 6-30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 7-30 மணியளவில் இரத கிரிகைகள் நடைபெற்று, 10 மணியளவில் மகா இரத வெள்ளோட்டம் நடைபெறும். தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகளின் அருள் ஆசியுடனும், துர்க்கா துரந்தரி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆசியுடனும்,பிரதம ஸ்தபதி அவர்களுக்கும் உதவி ஸ்தபதி அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தி தங்கவிருது வழங்கி ஏனைய கலைஞர்களும் கௌரவிக்கப்படுவார்கள்.

- தேவஸ்தானம்

(47817)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்.

# உதயன்

## ரணிலுக்கும் பொறுப்புண்டு

பிரிட்டனின் புதிய பிரதமர் ரொனி பிளயரின் அழைப்பை ஏற்று லண்டன் சென்றுள்ளார் இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா. அவர் பி பி ஸிக்கு வழங்கிய செவ்வியில் பல தகவல்களை வெளியிட்டிருக்கிறார்; பல கருத்துக்களையும் முன் வைத்திருக்கிறார்.

போரை நிறுத்துவது, விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது, அமைதி முயற்சிகள் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் ஆராய்வது ஆகிய நடவடிக்கைகளுக்கு, முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத்தமது கட்சி உடன்பாடு தெரிவித்துவிட்டதாக அவர் சொல்கிறார்.

இது விடயத்தில் நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அரசின் பொறுப்பே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் அரசாங்கக் கட்சியும் எதிர்க் கட்சியும் ஒரே அணியில் நின்று செயற்படுவதுஎன்று காணப்பட்ட சந்திரிகா — ரணில் இணக்கப்பாட்டுக்கு ஏற்ப, தனது பங்கைச் செய்வதற்கு தாம் தயார் என்பதனை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தேசியப் பிரச்சினை ஒன்றில் — நாட்டை மிகப்பெரிய அளவில் பாதிக்கும் விவகாரத்தில் — ஆளுங்கட்சியும் எதிர்க் கட்சியும் கைகோர்த்துச் செயற்படும் புதிய முயற்சிக்குத் தாமோ தமது கட்சியினரோ தடங்கலாகவோ தடையாகவோ இருக்கமாட்டார்கள் என்பதனை ரணில் தொட்டுக் காட்டியுள்ளார்.

ரணில் கூறுவது போல இனப்பிரச்சினைத் தீர்வு, போர் நிறுத்தம். பேச்சு வார்த்தை ஆகியவற்றுக்கான முன்முயற்சிகளை, செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதே. ஆயினும் புதிய இணக்கப்பாட்டின் பங்காளி என்ற வகையில் அரசாங்கத்தை இது விடயங்களில் தூண்ட வேண்டிய கடமை ரணிலுக்கு உண்டு. என்ன செய்யப் போகிறீர்கள், ஏது செய்யப்போகிறீர்கள், எப்போது செய்யப்போகிறீர்கள் என்று அரசை அவர் தட்டிக்கேட்க வேண்டும். அவருக்கு அந்த உரிமை உண்டு.

அரசு செயலில் இறங்கும் வரை, ஒத்துழைப்புத் தாருங்கள் என்று தேடி வந்து கேட்கும் வரை, அவர் ஆற அமர இருந்து 'கதை' சொல்லக் கூடாது. போர் நாட்டை அழித்துக் கொண்டிருக்கிறது. அதனை நிறுத்த வேண்டும் என்பதில் எதிர்க் கட்சி உட்பட எல்லாத் தரப்பினருக்கும் அக்கறை தேவை.

ஆகையால் தனக்குள்ள கடமை, பொறுப்பு, பங்கு என்பனவற்றை நிலைநாட்டி அரசாங்கம் இது விடயத்தில் வேகமாக உழைக்கப் பிரதான எதிர்க்கட்சி தூண்டுதலாக இருக்க வேண்டும்.

இல்லையேல் போரை நீடிப்பதற்கும், சமாதான முயற்சிகளை மேற்கொள்வதனைத் தாமதப்படுத்துவதற்கும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் காலங்கடத்துவதற்காகவுமே சந்திரிகா — ரணில் இணக்கப்பாடு காணப்பட்டதாகிவிடும்! அதாவது தமிழருக்கு எதிரான பெரும் சதியாகவே மேற்படி இணக்கப்பாட்டைச் சந்தேகிக்க நேரிடும்!

# சரக்குக் கப்பல்கள் காலியில் தரித்து நின்றே திருமலை வரும்

## பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

திருகோணமலை, ஜூன் 16

திருகோணமலைக்கு சரக்கு இறக்க வரும் கப்பல்கள் இனி காலித் துறைமுகத்திலேயே நங்கூரமிடும். பொருள் இறக்கும் நேரம் மட்டுமே கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்துக்குள் வர அனுமதிக்கப்படும்.

மேற் கண்ட தீர்மானம் கொழும்புப் பாதுகாப்பு அமைச்சில் நடந்த உயர் மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்துக்கு வெளியே தரித்து நின்ற ''அதேனா'' என்ற கிரேக்க நாட்டுக் கப்பல் குண்டு வெடிப்பால் சேதமடைந்ததையடுத்து எழுந்துள்ள நிலை குறித்து ஆராய இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சு மேலதிகச் செயலாளர் பந்துசேன தலைமையில் நடந்த இந்த மாநாட்டில், திருகோணமலையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வரும் சரக்குக் கப்பல்களை துறைமுகத்துக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ நங்கூரமிட அனுமதிப்பதில்லை என்றும் —

திருகோணமலைக்கு வரும் சரக்குக் கப்பல்களைக் காலித் துறைமுகத்தில் தரிக்க பணிப்பது என்றும் —

திருகோணமலையில் பொருள் ஏற்ற அல்லது இறக்க நேரம் ஒதுக்கியதும் நேரடியாக காலியில் இருந்து வந்து தமது பணியை முடித்து அவை திரும்ப வேண்டும் என்றும் — முடிவு செய்யப்பட்டது.

காலியில் இருந்து 9 மணித்தியாலங்களில் திருகோணமலைக்குக் கப்பல் வந்துசேர முடியும் என்றும் —

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சத்தை இதன்மூலம் தவிர்க்க முடியும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-150-3)

## பன்னிரு திருமுறைகளின் தொகுப்பு நூல்

சைவசமய நெறிகளின் விளக்கமாகத் திகழும் பன்னிரு திருமுறைகளும் ஒரே தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, தருமபுரம் ஆதீனத்தின் ஞானசம்பந்தப் பதிப்பகம் இந்த மிகப் பெரிய நூல் தொகுதியை வெளியிட்டுள்ளது. பதினாறு பகுதிகளாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ள இத்தொகுதியில் 17,000.க்கும் மேற்பட்ட பக்கங்கள் உள்ளன.

திருஞானசம்பந்த சுவாமிகள் முதல் சேக்கிழார் சுவாமிகள் ஈறாக இருபத்தேழு அருளாளர்கள் அருளிய திருமுறைகள் பொழிப்புரை, குறிப்புரை, உரைமாட்சி, தலவரலாறு, கல்வெட்டுக் குறிப்பு, சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சி உட்பட்ட பல சிறப்பம்சங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழில் வெளிவந்துள்ள மிகப் பெரிய நூல் தொகுதியாகக் கருதப்படும் பன்னிரு திருமுறைத் தொகுப்பு கடந்த வருடத்தில் தருமபுரம் ஆதீனத்தால் வெளியிடப்பட்டது.

நூல் தொகுதி பற்றிய விலை விவரம் மற்றும் பெற்றுக் கொள்ளும் முறை என்பன அடங்கிய கைந்நூல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் உள்ளது.

(அ-30)

## திருட்டு அதிகரிப்பு

நவாலி, ஜூன் 16

ஆனைக்கோட்டை, மானிப்பாய் பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இப்பகுதியில் ஆள்கள் குடி இருக்காத வீடுகளில் ஓடுகள், கதவுகள், நிலைகள் என்பனவற்றை திருடர்கள் கழற்றிச் செல்கின்றனர்- (இ-100)

## தாராசுகளுக்கு முத்திரையிடும் பணி இன்று

தென்மராட்சி, ஜூன் 16

சாவகச்சேரி நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வியாபாரிகளின் நிறுவை, அளவை உபகரணங்களுக்கு யாழ். செயலக நிறுவை, அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களால் முத்திரையிடும் வேலைகள் இன்று திங்கள் முதல் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்படும்.

(இ-117)

# $1\frac{1}{4}$ மணி நேரம் தாமதித்து வந்தார் ஜனாதிபதி

## அமெ. தூதுவர் பொறுமை இழப்பு

கொழும்பு, ஜூன் 16

கடந்த புதன்கிழமை கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுக்கான கூட்டத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தாமதமாகவே வந்தார்.

அக்கூட்டத்துக்கு வந்திருந்த அமெரிக்கத் தூதுவர் பீற்றர் பேர்லி உட்பட பல முக்கியஸ்தர்கள் ஜனாதிபதி வர முன்பே கூட்டத்தில் இருந்து வெளியேறிவிட்டனர்.

மேற்கண்ட தகவலை கொழும்பில் இருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' வெளியிட்டுள்ளது.

இக்கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற ஏற்பாடாகி இருந்தது. ஜனாதிபதி இக்கூட்டத்தில் கலந்து உரையாற்றவிருந்தார்.

ஜனாதிபதி பிற்பகல் 4 45 மணியளவில் தாமதமாகவே கூட்டத்துக்கு வந்தார். அதன் பின்பே கூட்டம் ஆரம்பமானது.

கூட்டத்தில் பங்குபற்ற அங்கு சென்றிருந்த அமெரிக்க தூதுவர் பீற்றர் பேர்லி உட்பட மற்றும் பல பிரதிநிதிகள் பொறுமை இழந்து கூட்டம் ஆரம்பமாக முன்னரே வெளியேறி இருந்தனர். (இ-150-3)

# சந்திரிகா ஏற்படுத்தியது யுத்த அமைச்சரவை

## அமைச்சர் ஒருவர் வர்ணிப்பு

கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மாற்றி அமைத்துள்ள அமைச்சரவை ''யுத்த அமைச்சரவை'' போல் உள்ளது.

இப்படி அமைச்சர் ஒருவர் வர்ணித்துள்ளார் என ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார ஏடு தெரிவித்தது.

அமைச்சரவையை மாற்றியமைத்ததன் மூலம் ஜனாதிபதி நண்பர்களை விட அதிகளவு எதிரிகளை சம்பாதித்துள்ளார் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

திடீர்த் தேர்தல் ஒன்றை நடத்தும் நோக்கத்தை வைத்து அமைச்சரவையை ஜனாதிபதி மாற்றியிருக்கலாம் என்று மற்றொரு செய்தி கூறியது.

நீண்ட காலமாகத் திட்டமிடப்பட்ட அமைச்சரவை மாற்றம் ஆளும் கட்சியில் உள்ளவர்களை மட்டுமல்லாது எதிர்க் கட்சியினரையும் சிந்திக்க வைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் — அரசாங்கம் தேர்தலை நடத்த முனைந்தால் அதைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்த அரசு முனையும் பட்சத்தில் அதனை எதிர்கொள்வது தொடர்பாக ஆராய ஐ. தே. கவின் செயற்குழு எதிர்வரும் 18 ஆம் திகதி கூடவிருக்கிறது.

(இ-150-8)

# சிறிமானிக்கு ஆறுதல் கூறிய பிரமுகர்கள்

கொழும்பு, ஜூன் 16

லண்டனில் தங்கியுள்ள ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்ட சிறிமானி அத்துலத் முதலிக்கு தொலைபேசி மூலம் ஆறுதல் கூறினார்.

''நீங்கள் பதவி விலக்கப்பட்டது ஆச்சரியத்தை அளிக்கிறது. உங்களுக்கு உதவ நான் தயாராகவிருக்கிறேன்'' என்று சிறிமானிக்கு ரணில் தொலைபேசியில் ஆறுதல் கூறினார் என கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே நேரம் — நுவரெலியாவில் இருந்து ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க சிறிமானிக்கு தொலைபேசி மூலம் ஆறுதல் கூறி '' வருந்தாதீர்கள்! உங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு'' என்று கூறினார்.

கொழும்பு மேயர் கரு ஜெயசூரியா நேரடியாக அவரது வீட்டுக்குச் சென்று ஆறுதல் கூறினார்.

அதே சமயம் — அமைச்சர்களான டி. எம். ஜயரத்தின அலவி மௌலானா, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் சிறிமானியின் வீட்டுக்குச் சென்று ஆறுதல் தெரிவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-150-3)

# இராணுவ நடவடிக்கைக்காக தனியார் லொறி சுவீகரிப்பு இல்லை

## வேலை நிறுத்தம் இன்று முடிவு

திருகோணமலை, ஜூன் 16

தனியார் லொறிகள் இனி இராணுவ நடவடிக்கைகளுக்கு சுவீகரிக்கப்படமாட்டா.

கொழும்பில் நடந்த மாநாட்டில் மேற்கண்டவாறு முடிவு செய்யப்பட்டது.

தனியார் லொறிகளை இராணுவ நடவடிக்கைக்காக சுவீகரிக்கக் கூடாது என்று கோரி நூற்றுக்கணக்கான லொறி உரிமையாளர்கள் கடந்த 12ஆம் திகதி முதல் திருகோணமலையில் வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தம் குறித்து ஆராய வெள்ளியன்று கொழும்பில் உணவுத்திணைக்கள ஆணையாளர் என். பி. லியனராட்சியும், பாதுகாப்பு அமைச்சு மேலதிக செயலாளர் பந்துசேனவும் மாநாடு ஒன்றைக் கூட்டினர்.

தனியார் லொறிகள் இராணுவ நடவடிக்கைக்காக இனி சுவீகரிக்கப்படமாட்டா என்று அங்கு எடுக்கப்பட்ட முடிவு உடனடியாக ''பக்ஸ்'' மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டது.

இன்று அவர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு தமது சேவையை ஆரம்பிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-150-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமாள் கோயிலடி சம்பவம் குறித்து ஈ. பி. டி. பி. அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தது குறித்து ஈ. பி. டி. பி. அமைப்பு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

யாழ். நவீன சந்தையில் பழக்கடை வைத்திருந்த அ. ஜெயராஜா (வயது 38) என்பவர் இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டது தெரிந்ததே.

தமது கடையைப் பூட்டிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி இருந்தார்.

(இ)

## நாளை

**ஆனி 3**

**செவ்வாய்க்கிழமை**

திதி: துவாதசி

பின்இரவு 3.08 வரை.

நட்சத்திரம்: சுவாதி

பிற்பகல் 2.17 வரை.

சுபநேரம் : 10 23-11.53

ராகுகாலம்: 2 53 -4.23

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## கொடிவாரம்

சாவகச்சேரி, ஜூன் 16

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கொடிவார அங்குரார்ப்பண வைபவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி நவீன சந்தை நுழைவாயில் மண்டபத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழக தலைவர் லயன் இ. கமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி வ. சின்னப்பு கலந்து கொண்டார்.

(இ-31)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில்

# அரச சார்பற்ற தொண்டு அமைப்பு செயற்பட மட்டக்களப்பில் தடை

மட்டக்களப்பு, ஜூன் 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்கள் செயற்பட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் 3 ஆவது படையணியைச் சேர்ந்த நிமால் ஜயசுந்தர இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

இந்தப் பணிப்புரையால் வெல்லாவெல, கொக்கட்டிச்சோலை, வவுணதீவு, செங்கலடி, வாகரை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களின் பணி பாதிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் நேற்று மட்டக்களப்பில் கூடி இது விடயமாக ஆராய்ந்தது.

சிவில் நிர்வாகப் பணிகளிலேயே தொண்டர் அமைப்புக்கள் ஈடுபடுவதால், இந்த பணிப்புரையை வாபஸ்பெற வேண்டும் என்று இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு அரச அதிபரை இந்த இணையப் பிரதிநிதிகள் இன்று சந்தித்து இது தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

கொழும்பில் அடுத்தமாதம் நடைபெறும் அரச சார்பற்ற அமைப்புக்களின் தலைமை அலுவலக கூட்டத்தில் இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட விருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ-21-3)

## ஒப்படைப்பு

கொழும்பு, ஜூன் 16

கடந்த வெள்ளிக்கிழமை பொலன்னறுவை மாவட்டம் வெலிகந்தவில் நாகஸதன்ன என்னும் இடத்தில் நடந்த மோதலில் படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் உடல் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-3-21)

# தாண்டிக்குளம் தாக்குதல் குறித்து முன்னரே தகவல் கிடைத்ததாம்

கடந்த 10ஆம் திகதி நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் பகுதிகள் மீதான தாக்குதல் ஆரம்பிக்க ஒன்றரை மணித்தியாலத்துக்கு முன்பே அது குறித்து படையினருக்கு தகவல் கிடைத்ததாகவும்—

அத்தகவல் உரிய முறையில் உயர்மட்டத்தை அடையவில்லை என்றும் — விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தப்போவதாக தகவல் கிடைத்துள்ளது என்று கொக்குவெளி முன்னரங்க காவல் நிலையில் கடமையில் இருந்த சப் இன்ஸ்பெக்டர் தாக்குதல் ஆரம்பிக்க ஒன்றரை மணித்தியாலயத்துக்கு முன்பாக மாமடு பொலிஸ் நிலைப்பொறுப்பதிகாரிக்கு அறிவித்தாராம்.

அவர் அத்தகவலை சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிக்கு அனுப்பினார்.

அத்தகவல் அடுத்த நாள் காலையே உயர்மட்டத்துக்கு போய்ச் சேர்ந்தது.

அத் தகவல் குறித்து உடன் நடவடிக்கை எடுத்திருந்தால் பாரிய தாக்குதலை முறியடித்திருக்கலாம் என்று இத்தாக்குதல் குறித்து நடக்கும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

# வன்னியில் இடம் பெயர்ந்தோர் இன்னும் நிவாரணம் பெறவில்லை

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை காரணமாக வன்னியில் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் மட்டும் சமைத்த உணவு வழங்கி வருவதாகவும் —

அரசாங்கமோ, அரச சார்பற்ற தொண்டர் அமைப்புக்களோ நிவாரண உதவி எதையும் வழங்கவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

## மாணவர் அடையாள அட்டைகள்

தென்மராட்சி, ஜூன் 16

பாடசாலைகளில் இருந்து விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து பின்னர் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் விநியோகிக்கப்படாத அடையாள அட்டைகள் பாடசாலை அதிபர்களால் யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன.

இப்படி அனுப்பப்பட்ட விசேட அடையாள அட்டைகள் அந்தந்தப் பிரிவு கிராம சேவையாளர்கள் மூலம் விநியோகிக்கப்படும். (இ-117)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி, ஜூன் 16

சாவகச்சேரி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில்கடமையாற்றி இளைப்பாறிச் செல்லும் பத்து ஊழியர்களுக்கு சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் எதிர்வரும் 21 ஆம் திகதி பிரிவுபசார விழா நடத்தப்பட உள்ளது.

சங்கத் தலைவர் சி. சிவபால சுப்பிரமணியம் தலைமையில் சங்க கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. பாலச்சந்திரன், யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி துணையாளர் செ. கு, சண்முகநாதன் உட்பட பலர் கலந்து கொள்வர். (இ-117)

## நாடாளுமன்ற ஆயுட்காலத்தை நீடிக்க அரசு முயற்சிக்கிறதா?

### ரவி கருணநாயக்க கேள்வி

தற்போதுள்ள நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை கருத்துக்கணிப்பு நடத்தி நீடிக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா.?

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க கடந்த வியாழக்கிழமை நடந்த அரச நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் இப்படிக் கேள்வி எழுப்பினார்.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இதற்கு பதில் அளிக்கையில், 'இது பிழையான தகவல் 94 ஆம் ஆண்டு ஓகஸ்டில் இருந்து 6 ஆண்டுகளே பதவியில் இருப்போம். நாடாளுமன்றத்தின் ஆயுளை நீடிக்கமாட்டோம்'' என்றார். (இ-3)

## நயினாதீவில் இம்முறையும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை

குருநகர், ஜூன் 16

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த உச்ச திருவிழாவாகிய இம் மாதம் 18 ஆம், 19 ஆம், 20 ஆம், 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சப்பறம், தேர், தீர்த்தம், தெப்பத்திருவிழாக்களில் இவ்வருடமும் யாழ்.தெற்கு பிரதேச சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் சேவையாற்ற உள்ளார்கள் என சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ். பிரிவு ஆணையாளர் எஸ். செல்வநஞ்சன் தெரிவித்தார்.

யாழ். இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். மத்தியகல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, கனகரத்தினம் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவ அம்புலன்ஸ் தொண்டர்களுடன் சேர்ந்து வெளிவாரிப் பிரிவை சேர்ந்த தொண்டர்களும் இம்முறை அங்கு சேவையாற்ற உள்ளார்கள்.

இவர்கள் வழமைபோல் நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயில் மேற்கு வீதியில் அமைந்துள்ள தற்காலிக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவி முகாமில் 24 மணித்தியாலமும் சேவையிலீடுபடுவார்கள்.

மேலும் இத்திருவிழாவுக்குச் சேவையிலீடுபட தமது பெயர்களைப் பதிவு செய்த சகல தொண்டர்களுக்குமான அவசிய கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கள் பிற்பகல் 2. 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற உள்ளதாக எஸ். செல்வநஞ்சன் தெரிவித்தார். (இ-51)

## இயங்குகின்றன

கொழும்பு, ஜூன் 16

ஈச்சமோட்டை சனசமூக நிலையம், நூல் நிலையம், வாசிக சாலை ஆகியவை கடந்த கால யுத்த அனர்த்தங்களின் பின் அண்மையில் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளன. (இ-30)

## கொள்வனவுக்கு உதவி

தென்மராட்சி, ஜூன் 16

வரணியில் அகதிகளுக்கான ஐ நா, தூதரகத்தால் புனரமைக்கப்பட்ட் பொது நூல் நிலையத்துக்கு 90 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களைக் கொள்வனவு செய்ய நிதி உதவி வழங்குவதாக அந்த அமைப்பின் யாழ். மாவட்டப் பிரதிநிதி உறுதி அளித்துள்ளார். (இ-117)

## விமானத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளதையடுத்து ஏ. என். 9 ரக சரக்கு விமானங்கள் இந்தப் பணிக்காகப் பெறப்பட்டுள்ளன.

இந்த சரக்கு விமானங்களில் வசதி இல்லாத காரணத்தாலேயே படையினரில் சிலருக்கு மயக்கம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (இ-150)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்)

லிம் கட்சிகளுடன் பேச்சு நடத்துவார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முயற்சியில் இவரது விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர். (இ-150-3)

## மன்னாரிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த செவ்வாய்க்கிழமை புலிகளின் பெரும் தாக்குதலுக்கு உள்ளான தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதிகளில் உள்ள படையினரைப் பலப்படுத்துவதே தற்போதைய படை நகர்வின் நோக்கம் என்றும்—

மன்னாரில் இருந்து வரும் படையினரும் இணைந்து கொண்ட பின்னர் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் நம்பப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதலை அடுத்து வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதிகள் பலப்படுத்தும்வரை தற்காலிகமாகநிறுத்தி வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-3-5-164)


## அரியதோர் வாய்ப்பு

இதோ:-

அறிந்தறிந்து வரும் யாழ். நகரத்து மக்களுக்காகவும், ஏனைய மக்களுக்காகவும் பெருமளவு தரமான பொருளாக மலிவு விலையில் வாங்க வேண்டுமென்பதற்காக தொடர்ந்து விலை பெருமளவு குறைப்பு

★ வண்ணக் காலணிப் பூங்கா ★

இரு மாதங்களுக்கு மட்டும்!

D. S. I. பாட்டா, றன்பா

ஆண்கள், பெண்கள், மாணவர்கள், சிறுவர்கள்

சப்பாத்துகள், சாண்டில், செருப்புகள்

| | | |
|---|---|---|
| சிங்கப்பூர் செருப்பு | : | 165/- , 200/- |
| சாறி செருப்பு | : | 120/- |
| பெண்கள் விரும்பும் பேஸ் | : | 80/- |

மேலும் பல பொருள்கள் மலிவு விலையில்

விரையுங்கள்!

(வாடிக்கையாளர்கள் விரும்பிக் கேட்ட செருப்புகள், மிகப்பெரிய D. S. I றபர் வந்துள்ளன)

பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி. (47818)


## மரண அறிவித்தல்

### அப்பையா ஜெயராஜா

வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், 7/1, அன்னசத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். மார்க்கட் பிரபல பழக்கடை உரிமையாளர் அப்பையா ஜெயராஜா 14-06-97 அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற அப்பையா மற்றும் திருமதி அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், இராகவேந்திரன், சுஜீவா, தயாளினி, தனுஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், சி. செல்வராணி, ப. லீலாவதி, வி. கமலராணி, அ. சகாயராணி, அ. ஜீவராணி, அ. உதயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செ. ஜெயச்சந்திரனின் (பெரியதம்பி, யாழ். மரக்கறி மார்க்கட்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16-6-97) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டடி வில்லூன்றி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
செ. பெரியதம்பி
(மருமகன்)

யாழ். மரக்கறி மார்க்கட்,
யாழ்ப்பாணம். (47825)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org